**பட்டியல் வகுப்பினர் பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)**

**சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை: திரு. M. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

அமர்வு நீதிபதி பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான(வன்கொடுமை தடுப்பு)

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06 ஆம் நாள் திங்கள்கிழமை

**(சிறப்பு அமர்வு வழக்கு எண். 03/2026**

**[CNR.NO.TNTV16-000234-2025] )**

| | |
|---|---|
| புகார்தாரரின் பெயர் | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>திருவாரூர் உட்கோட்டம்,<br>திருவாரூர் அனைத்து மகளிர் காவல்<br>நிலைய குற்ற எண். 35/2025. |
| குற்றம்<br>சாட்டப்பட்டவர்களின்<br>பெயர்கள் | மனோகரன் (வயது 26/2026)<br>த/பெ. குளுந்தான்,<br>மேலத்தெரு,<br>தப்பளாம்புலியூர்,<br>திருவாரூர் மாவட்டம். |
| எதிரி மீதான<br>குற்றச்சாட்டுகள் விபரம் | **எதிரி மீதான குற்றச்சாட்டு**<br>பா.நி.ச பிரிவு 69 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) மற்றும் பா.நி.ச பிரிவு 351(3) உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ். |
| எதிரி காவலில்<br>அடைக்கப்பட்ட நாள் | 27.09.2025 ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | 27.09.2025 | |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 05.02.2026 | |
| பா.நா.சு.ச பிரிவு 251- ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டகப்பட்ட நாள் | 24.02.2026 | |
| பா.நா.சு.ச பிரிவு 348-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பலவகை மனுக்கள் மற்றும் அதன் மீதான உத்தரவுகள். | -- | |
| **சாட்சிகள்** | **மு.வி. நாள்** | **கு.வி. நாள்** |
| அ.சா.1 புவனேஸ்வரி - புகார்தாரர் | 13.03.2026 | இல்லை |
| அ.சா.2 மாதவன் | 13.03.2026 | இல்லை |
| அ.சா.3 மணிகண்டன் - காவல் துணை கண்காணிப்பாளர் | 24.03.2026 | 24.03.2026 |
| பா.நா.சு.ச பிரிவு 351(1)(b)-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 27.03.2026 | |
| எதிரி தலைமறைவான நாள் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | -- | |
| குற்றம் சாட்டப்பட்டவரின் கூற்று | குற்றவாளி இல்லை | |

| நீதிபதியின் தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை. |
|---|---|
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக**, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பா.நி.ச பிரிவு 69 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) மற்றும் பா.நி.ச பிரிவு 351(3) உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரியை பா.ந.சு.ச பிரிவு 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.02/2026 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன செல்போன் ஒன்று சா.பொ.2 ஆன பென்டிரைவ் ஒன்று ஆகியவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்துவிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 27.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுக்காக சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S. மகாதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முத்தையன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலித்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:

இவ்வழக்கின் அ.சா.1 புவனேஸ்வரி பட்டியல் இன தாழ்த்தப்பட்ட இந்து-பறையன் வகுப்பை சார்ந்தவர் ஆவார். எதிரி இந்து-பிற்பட்ட அம்பலக்காரர் வகுப்பை சார்ந்தவர் ஆவார். அ.சா.1 உடன், எதிரி 2023-ம் ஆண்டு முதல் பேசி பழகி காதலித்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 01.06.2025-ம் தேதி அ.சா-1 சென்னையில் இருந்துள்ளார். எதிரி அ.சா.1-ஐ பார்ப்பதற்காக சென்னைக்கு சென்றபோது OYO APP மூலமாக ரூம் புக் செய்து மறைமலை நகர் திருக்குறள் தெருவில் உள்ள GDH லாட்ஜிக்கு அழைத்து சென்று அ.சா.1-ஐ திருமணம் செய்து கொண்டு நன்றாக வாழ வைப்பதாக ஆசை வார்த்தைகள் சொல்லி அ.சா.1-ஐ நம்பவைத்து உடலுறவு கொண்டுள்ளார். பின்னர், கடந்த 20.09.2025-ம் தேதி அ.சா.1 எதிரியிடம் திருமணம் செய்துகொள்ளுமாறு கூறியபோது அ.சா.1-ஐ எதிரி திருமணம் செய்து கொள்ள முடியாது பற தேவடியா நான் அம்பலக்காரர் சாதியை சேர்ந்தவன் எப்படி உன்னை கல்யாணம் பண்ணிப்பேன் என்று சாதி பெயரை சொல்லி கேவலமாக திட்டி திருமணம் செய்து கொள்ள மறுத்து அ.சா.1-ன் பெற்றோரை போன் மூலம் தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், இதனால் இந்த எதிரியானவர் பா.நி.ச பிரிவுகள் 296(b), 318(2), 69, 351(3) உ/இ ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(w)(i), 3(1)(s), 3(2)(va) -ன்

கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இவ்வழக்கின் எதிரி முன்னிலையானவுடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழுங்கப்பட்டு பின்னர் இரு தரப்பிலும் வாதங்கள் கேட்ட பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரி மீது பா.நி.ச பிரிவு 69 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) மற்றும் பா.நி.ச பிரிவு 351(3) உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றசாட்டுகளை மறுத்துள்ளார். இதனை தொடர்ந்து அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக இந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**3.** இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா-1 முதல் அ.சா-3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-16 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. **அரசுத்தரப்பு சாட்சியங்களின் சாராம்சம்** :-

**(i). அ.சா-1 புவனேஸ்வரி,** இவர் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தின், இவர் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். எதிரி

அம்பலக்காரர் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். இந்த அ.சா.1 நன்னிலத்தில் உள்ள ஆனந்தலெட்சுமி என்ற கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது திருவாரூரில் இருந்து இவர் நன்னிலத்திற்கு பேருந்தில் சென்றுள்ளார். அப்போது இந்த அ.சா.1-ன் தோழியான பிரதிபா என்பவர் மூலம் மேற்படி பிரதிபாவின் உறவினரான இந்த எதிரி, அ.சா.1-க்கு அறிமுகம் ஆகியுள்ளார். அதன் பின்னர் அ.சா.1-ம் எதிரியும் ஒருவருக்கொருவர் காதலித்து வந்துள்ளனர். இந்த விபரம் அ.சா.1-ன் பெற்றோர்களுக்கு தெரிந்ததன் காரணமாக அ.சா.1ன் பெற்றோர்கள் அ.சா.1-ஐ கண்டித்துள்ளனர். இருந்தபோதிலும் அ.சா.1, தொடர்ந்து இந்த எதிரியை காதலித்து வந்துள்ளார். இதனை அடுத்து இருவரும் பெற்றோருக்கு தெரியாமல் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர். அ.சா.1ன் ஊர்காரர்களுக்கு இந்த விபரம் தெரியவந்துள்ளது. இதனால் ஊர்காரர்கள் அ.சா.1ன் பெற்றோருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இதனால் அ.சா.1-ன் தகப்பனார் இந்த அ.சா.1-ஐ, திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு அ.சா.1 ஆனவர் தன்னுடன் வந்திருந்த உறவினர் ஒருவர் எழுதிக்கொடுத்த ஒரு பேப்பரில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளார். அ.சா.ஆ.2 ஆன புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தனது என கூறியதால் இவர் மூலம் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்

ஆஜராகி போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு பேரில் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்நிலையில், கடந்த 04.03.2026 ம் தேதி (அதாவது வழக்கு பதிவு செய்த பின்னர்) இந்த அ.சா.1-ம், எதிரியும் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவந்திபுரம் கோவிலில் கடந்த 04.03.2026-ம் தேதி செய்துகொண்டு பின்னர், இந்த திருமணத்தை பதிவு செய்து கொண்டுள்ளனர்.

**(ii). அ.சா.2 மாதவன்**, இவரது சாட்சியத்தின், இவர் அ.சா.1-ன் தந்தை ஆவார். இவர் அ.சா.1 தனது சாட்சியத்தில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து இவரும் கூறியுள்ளார். மேலும், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் சா.பொ.1 ஆன அ.சா.1-ன் செல்போனை போலிசாரிடம் கொடுத்துள்ளார்.

**(iii). அ.சா.3 மணிகண்டன்** இவர் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது சாட்சியத்தின் படி கடந்த 27.09.2025 ஆம் தேதி திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சத்தியா பணியிலிருந்தபோது அ.சா.1 காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகாரின்படி நிலைய குற்ற எண்.35/2025-ல், பா.நி.ச பிரிவுகள் 296(b), 318(2), 69, 351(3) உ/இ 3(1)(w)(i), 3(1)(s), 3(2)(va) SC/ST (PoA) Act கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதை தொடர்ந்து திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 27.09.2025-ம் தேதி அ.சா.ஆ.4 ஆன அலுவலக நடவடிக்கை ஆணை மூலம் இந்த அ.சா.3-ஐ புலன் விசாரணை செய்ய உத்தரவிட்டதை தொடர்ந்து இந்த அ.சா-3 அன்றைய தினமே 15.30 மணியளவில்

சம்பவ இடத்திற்கு சென்று அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ-6 மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சியிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலங்கள் பதிவு செய்த எதிரியை கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். கடந்த 28.09.2025 ஆம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1-ஐ மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 மருத்துவ சான்று ஆகியவைகளை பெற்று சான்று வழங்கிய மருத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும், சம்பவ சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கடந்த 29.09.2025 ஆம் தேதி இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட அ.சா1 ஐ ரகசிய வாக்குமூலம் பெறவேண்டி 183(5) பா.நா.சு.ச-ல் கீழ் தலைமைக்காவலர் வாசுகி என்பவரிடம் கூடுதல் மகிளா நீதிமன்றம் அவர்களிடம் ஆஜர்படுத்த ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில், குற்றவியல் நீதித்துறை நடுவர் அ.சா.1 அளித்த வாக்குமூலத்தை அ.சா.ஆ.9 ஆக பதிவு செய்துள்ளார். கடந்த 09.10.2025 ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள GDH லாட்ஜ் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.10 பார்வை மகஜர், அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். மேலும், அன்றைய தினம் அந்த லாட்ஜ் மேலாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், நீதிமன்ற காவலில் இருந்து வந்துள்ள இந்த எதிரியை போலிஸ் காவலில் எடுத்து கடந்த 10.10.2025-ம் தேதி மருத்துவர் முன்பு ஆஜர் செய்து

மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி இந்த எதிரி உடலுறவு கொள்ள தகுதியானவர் என்பதற்கான அ.சா.ஆ.12 மருத்துவ சான்று பெற்றுள்ளார். இவ்வழக்கின் எதிரிக்கும், அ.சா.1-க்கும் சாதி சான்றிதழ் வழங்க கோரியதில், திருவாரூர் வாட்டாட்சியர் எதிரியானர் இந்து அம்பலக்காரர் என்பதற்கான அ.சா.ஆ.13 சாதி சான்றிதழ் அ.சா.1 இந்து பறையன் வகுப்பை சார்ந்தவர் என்பதற்காக அ.சா.ஆ.14 சாதி சான்றிதழ் வழங்கியுள்ளார். மேற்படி வட்டாட்சியரை 14.10.2025-ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் அ.சா.1-டம் அ.சா.ஆ.2 ஆன புகாரை பெற்று அ.சா.ஆ.3 ஆன முதல்தகவல் அறிக்கையினை பதிவு செய்த அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சத்தியா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், 15.11.2025-ம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1-ன் தந்தையான அ.சா-2 தாமாக முன்வந்து அ.சா-1 மற்றும் எதிரி இணக்கமாக இருந்த அ.சா.ஆ.15 கலர் புகைப்படம் ஒன்றும், சா.பொ.1 ஆன செல்போன் ஒன்று மற்றும் சா.பொ-2 ஆன பென்டிரைவ் ஒன்று ஆகியவை பெற்று அதை அ.சா.ஆ.16 படிவம் எண்.91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். புகார்தாரரின் தந்தையான அ.சா.2-ஐ விசாரணை செய்து மறு வாக்கு மூலம்பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 26.11.2025-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**5**. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சியங்கள் முடிந்தவுடன் அரசுத்தரப்பு சாட்சியங்கள் எதிரிக்கு பாதகமாக உள்ள விஷயங்களைப் பொறுத்து பா.நா.சு.ச பிரிவு 351(1)(b) -ன் கீழ் சொல்லப்பட்டுள்ளவாறு எடுத்துக்கூறி வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்களை பொய் சாட்சியம் என்று கூறியுள்ளார். பின்னர், எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

**6.** இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பா.நி.ச பிரிவு 69 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) மற்றும் பா.நி.ச பிரிவு 351(3) உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

**7. <u>அரசுத்தரப்பு வாதம்</u> :-**

இவ்வழக்கில் எதிரியானவர் அ.சா.1-ஐ காதலிப்பதாக கூறி அவரை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து உடலுறவு வைத்துக்கொண்டு பின்னர் சாதி பெயரினை காரணம் காட்டி திருமணம் செய்துக்கொள்ள மறுத்துள்ளார். மேலும், அ.சா.1-ஐயும், அவரது தந்தையான அ.சா.2-ஐயும் போன் மூலம் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி அ.சா.1-ஐ திருமணம் செய்துகொள்ள மறுத்ததுடன் அ.சா.1 மற்றும் அ.சா.1-ன் தந்தையான அ.சா.2 ஆகியோர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ளார். இந்த அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை வலுவூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

இருந்தபோதிலும், அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.2 ஆன புகார், அ.சா.1 ஆனவர் கூடுதல் மகிளா நீதித்துறை நடுவரிடம் அளித்த அ.சா.ஆ.9 ஆன வாக்குமூலம், அ.சா.1-க்குரிய அ.சா.ஆ.7 ஆன மருத்துவ சான்று, எதிரிக்குரிய அ.சா.ஆ.12 ஆன மருத்துவ சான்று, அ.சா.ஆ.13 ஆன எதிரியின் சாதி சான்றிதழ், அ.சா.ஆ.14 ஆன அ.சா.1-ன் சாதி சான்றிதழ், சா.பொ.1 ஆன செல்போன் மற்றும் சா.பொ.2 ஆன பென்டிரைவ் ஆகியவைகளின்படி இந்த எதிரி குற்றமிழைத்துள்ளது தெரியவருகிறது என்றும் மேலும், இந்த எதிரி அ.சா.1-ஐ இந்த வழக்கின் அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னர் திருமணம் செய்துகொண்டுள்ளதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்றும், இந்த பொருண்மைகளை எல்லாம் ஒருங்கிணைத்து பார்க்கும்போது அரசுத்தரப்பில் இந்த எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பது தெரியவருகிறது என்றும், இதனால் இந்த எதிரி சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்</u> :-

அரசுத்தரப்பில் கூறப்படுவதுபோல் இந்த எதிரி அ.சா.1-டம் உடலுறவு எதுவும் வைத்துக்கொள்ளவில்லை. மேலும், அ.சா.1-ன் சாதி பெயரை குறிப்பிட்டு தெளிவாக எதுவும் பேசவில்லை. இந்த எதிரியும், அ.சா.1-ம் கடந்த 04.03.2026 ம் தேதியன்று திருமணம் செய்து கொண்டு மேற்படி திருமணத்தை பதிவு செய்துள்ளனர். உண்மையில் இந்த அ.சா.1-ம், எதிரியும் காதலித்து வந்துள்ள

நிலையில் இருவரும் திருமணம் செய்துக்கொள்ள முடிவு செய்துள்ளனர். இந்த விபரம் தெரிந்த அ.சா.1-ன் ஊரில் உள்ளவர்கள் தூண்டுகோளின்பேரில் அ.சா.1-ன் பெற்றோர் அ.சா.1-ஐ அழைத்துக்கொண்டு காவல்நிலையத்திற்கு சென்று அ.சா.1ன் உறவினர் எழுதிவைத்திருந்த அ.சா.ஆ.2 ஆன புகாரில் இவர் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளார். போலிசார் சொல்லி கொடுத்துள்ளதுபோல் நீதித்துறை நடுவரிடம் அ.சா.1 வாக்குமூலம் அளித்துள்ளார் இது தொடர்பாக அ.சா.1 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். அரசுத்தரப்பு பாதிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய அ.சா.1 இந்த எதிரி தன்னிடம் உடலுறவு வைத்துக்கொண்டார் என்றும், பின்னர் சாதியின் பெயரை காரணம் காட்டி திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் என்றும் மேலும், அ.சா.1-ஐயும் அவரது தந்தையான அ.சா.2-ஐயும் சாதி பெயரை சொல்லி திட்டியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் இந்த எதிரி மீதான குற்றம் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்துவிட்டதாக கருத இயலாது எனவும், இதனால் இந்த எதிரியானவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என வாதம் செய்துள்ளார்.

9. **தீர்வு :-**

இவ்வழக்கில் அரசுத்தரப்பு கூற்றின்படி பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் நபர் அ.சா.1 ஆனவர் தனது சாட்சியத்தில் தன்னை இந்த எதிரி திருமணம் செய்து கொள்வதாக கூறி உடலுறவு வைத்துக்கொண்டு பின்னர் சாதியை காரணமாக காண்பித்து திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் என்று கூறவில்லை.

இதனால், இந்த எதிரியானவர் அரசுத்தரப்பில் கூறப்படுவதுபோல் இந்த அ.சா.1-ஐ காதலிப்பதாக கூறி ஏமாற்றி உடலுறவு வைத்துக்கொண்டார் என்றோ அல்லது சாதியின் பெயரை சொல்லி இந்த அ.சா.1 இழிவுபடுத்தினார் என்றோ கருத இயலாது. மேலும், அ.சா.1-ன் தகப்பனாரான அ.சா.2 இந்த எதிரி குற்றம் செய்துள்ளார் என கருதும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இவ்வாறான நிலையில், அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள எதிரி மற்றும் அ.சா.1-க்குரிய மருத்துவ சான்றிதழ்கள் மற்றும் சாதி சான்றிதழ்கள் ஆகியவைகளின் அடிப்படையில் இந்த எதிரி குற்றம் செய்துள்ளார் என கருத இயலாது.

**10.** அ.சா.1 நீதித்துறை நடுவரிடம் அளித்துள்ளதாக சொல்லப்படும் அ.சா.ஆ.9 ஆன வாக்குமூலத்தை பொறுத்தவரையில், போலிசார் சொல்லிக்கொடுத்தபடி மேற்படி வாக்குமூலம் கொடுத்ததாக அ.சா.1 கூறிய நிலையில் மேற்படி அ.சா.ஆ.9 ஆன வாக்குமூலத்தின் அடிப்படையிலும், அ.சா.3 ஆன காவல் துணை கண்காணிப்பாளர் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறும் சாட்சியத்தின் அடிப்படையிலும் இந்த எதிரி குற்றம் இழைத்துள்ளார் என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக**, எதிரி மீது பா.நி.ச பிரிவு 69 உ/இ. ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va), ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(1)(s) மற்றும் பா.நி.ச பிரிவு 351(3) உ/இ.

ப.ச.&ப.ப. (வ.கொ.த.) சட்டப்பிரிவு 3(2)(va)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப் படவில்லை என்பதால், எதிரி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, மேற்படி குற்றச் சாட்டுகளிலிருந்து எதிரியை பா.நா.சு.ச 258-ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.02/2026 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 ஆன செல்போன் ஒன்று சா.பொ.2 ஆன பென்டிரைவ் ஒன்று ஆகியவைகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழித்துவிட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.06 18:35:44 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | புவனேஸ்வரி |
| அ.சா.2 | மாதவன் |
| அ.சா.3 | மணிகண்டன் - காவல் துணை கண்காணிப்பாளர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | திருவாரூர் காவல் கண்காணிப்பாளர் உத்தரவு |
| அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | மருத்துவச்சான்று |
| அ.சா.ஆ.9 | வாக்குமூலம் |
| அ.சா.ஆ.10 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.11 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.12 | மருத்துவ சான்று |
| அ.சா.ஆ.13 | எதிரியின் சாதி சான்று |
| அ.சா.ஆ.14 | அ.சா.1-ன் சாதி சான்று |
| அ.சா.ஆ.15 | புகைப்படம் |
| அ.சா.ஆ.16 | படிவம் எண்.91 |

**<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள்.</u>** (C.P,No.02/2026)

சா.பொ.1 Vivo செல்போன் ஒன்று.

சா.பொ.2 Sandisk என்று எழுதப்பட்ட Pendrive 1.

**<u>எதிரி தரப்பு சாட்சி , சான்றவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்:-</u>** -

-இல்லை-

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.06 18:36:00 +0530

அமர்வு நீதிபதி,

பட்டியில் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு)

வழக்குகளை விசாரிப்பதற்கான

சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.